பதிவு எண் : ப. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 15] சென்னை: ஐப்பசி 4உ (21—10—67) சனி வளியூர்: ஐப்பசி 5உ (22—10—67) ஞாயிறு [இதழ்: 107

தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில்...

எதனை நம்பிப் போட்டியிடுகின்றனர் காங்கிரசார்?

"ஒரு விவரத்தைத் தெரியாமல் காங்கிரசுக்காரர்கள், இந்த நாடாளுமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்!

"பொதுத் தேர்தலில், சட்டமன்றத்திற்கும்—நாடாளுமன்றத்திற்கும் நின்றோம்; பல இடங்களில் நாங்கள் வெற்றி பெற்றோம்; சில இடங்களில் காங்கிரசார் வெற்றி பெற்றார்கள்; 137 இடங்களை எங்களுக்கும், 49 இடங்களை அவர்களுக்கும் மக்கள் தந்தார்கள்.

"ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் தி. மு. க. சார்பில் 25 பேர் நின்றார்கள்; அந்த இருபத்தைந்து [illegible] மேமக்கள் வெற்றி பெறச் செய்தார்கள்!

"'சட்டமன்றத்திற்குத் தி. மு. கழகத்தை[illegible]ர்ந்தவர்கள் சிலர் செல்லவிட்டாலும், டில்லிக்கு அனுப்[illegible]பவர்கள் அண்[illegible] வரும் தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்களாக[illegible]வேண்டும்' என்று கருதி, மக்கள், தி. மு. கழகத்திற்கு [illegible]த்தார்கள்.

"தென் சென்னையில் எ[illegible]னியும், வடசென்னையில் மனோகரனையும், செங்கற்பட்டில் சிட்டிபாபுவையும், வேலூரில் குசேலரையும்—இப்படி, நாங்கள் நின்ற ஒவ்வொரு தொகுதியிலும் எங்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

"இதன் உட்பொருள், 'டில்லிக்குச் செல்பவர்கள் தி. மு. கழகத்தினராகத்தான் இருக்கவேண்டும் என்று மக்கள் மனதில் உறுதியாகிவிட்டது'என்பதுதான்!

"இவ்விதம் 25 பேர் ஒரு கட்சி சார்பில் நின்று—25 பேரும் வெற்றி பெற்ற நிகழ்ச்சி, தமிழகத்து வரலாற்றிலேயே—ஏன், இந்தியத் துணைக்கண்ட வரலாற்றிலேயே இல்லை!

"மற்ற கட்சிகளின் சார்பில் 50 பேர் நின்றார்கள்; 40 பேர் வெற்றி பெற்றார்கள்' என்ற வரலாறு இருந்திருக்கலாம்; ஆனால், '25 பேர் நின்று 25 பேரும் நூற்றுக்கு நூறு வெற்றி பெறுகிறார்கள்' என்ற நிலையை, எடுத்துக்காட்டுக்குக்கூடக் காட்ட முடியாது!

"இத்தகைய மகத்தான வெற்றியைத் தேடிக்கொடுத்த மக்களிடத்திலே எதை நம்பிப் போட்டியிடுகிறார்கள் எனப்துதான் எனக்குப் புரியவில்லை!

"'இந்தி எதிர்க்கப்பட வேண்டுமானால், தி. மு. கழகம் டில்லியில் இருக்க வேண்டும்' என்று மக்கள் நினைத்தார்கள்!

"'தமிழகத்தின் உரிமை காக்கப்பட வேண்டுமானால், தி. மு கழகம் டில்லியில் இருக்க வேண்டும்' என்று மக்கள் நினைத்தார்கள்!

"'தமிழகத்தின் தேவைகள் அங்கே எடுத்துச் சொல்ல, டில்லிக்குத் தி. மு. கழகம் செல்ல வேண்டும்' என்று மக்கள் நினைத்தார்கள்!

"இந்த நினைப்பை—முடிவை மாற்றிக்கொள்ள எந்தவிதமான நிகழ்ச்சியோ, காரணமோ நடந்துவிடவில்லை!''

--அறிஞர் அண்ணா
(சென்னை அடையாறு கூட்டத்தில்)

காங்கிரசார் நடத்திய ஆளில்லாத ஊர்வலம்!

[illegible]னை, அ[illegible]

தென் சென்னைத் தேர்தல் முன்னிட்டு, கா[illegible]ரசுக்கா[illegible] கோடம்பாக்கம் வடபழனியில் நடத்தும் சைதைத் [illegible]நாகுத[illegible] கிரசு மாநாட்டினையொட்டி, 'பிரும்மாண்டமான ஊ[illegible]' [illegible] போவதாகத் தங்கள் பதாதிகைகளிலும், பெரிய பெரிய [illegible] கள் வாயிலாகவும் விளம்பரம் செய்துகொண்டனர்.

இந்த ஊர்வலம் வருகிற வழியெல்லாம் கொடிச[illegible]ப[illegible]னை நாட்டியும், குழல் விளக்குகளைப் பொருத்தியும், நேற்று [illegible] முதலே காங்கிரசுக்காரர்கள் அலங்கார மேடைகளில் ஈடுபட்டிரு[illegible]னர்.

அவர்கள் காட்டிய பரபரப்பைப் பார்த்து; பொத[illegible]க்களும் 'ஏதோ, பெரியதோர் ஊர்வலம் வரப்போகிறது' எ[illegible]; எதிர் பார்த்து, நேற்று மாலை ஆங்காங்கு நேங்கி நின்றுகொ[illegible] இருந் தனர். ஊர்வலம் வருவதற்குச் சிறிது நேரம் முன்பாக [illegible]காரில் ஒலிபெருக்கு மூலம், 'ஊர்வலம் வருகிறது ;ஊர்வலம் வந்[illegible]கொண் டிருக்கிறது' என்று அறிவித்துக்கொண்டு வந்தனர். சிறிது நேரத் திற்கெல்லாம் ஊர்வலமும் வந்தது!

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

பெய்தும் கெடுக்கிறது பெருமழை!

தஞ்சைத் தரணியில் அறுவடை பாதிப்பு

கடந்த இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்யும் அடை மழை, இந்திய துணைக் கண்டத்தின் கவனத்தை ஈர்த்த 'ஏ. டி. டி. 27' அமோக விளைச்சல் அறுவடையினைப் பெரிதும் பாதித் துள்ளதாகத் தஞ்சைப் பகுதிச் செய்திகள் தகவல் தெரிவிக் கின்றன.

வட கிழக்குப் பருவ மழையின் இந்த குறுக்கீட்டால், அறுவடையில் தேக்கமும், அறுத்த தானியங்களுக்குப் பாதிப்பும் ஏற்பட் டிருக்கிறது.

இதுபோன்ற இயற்கை இன்னல்களைப் போக்குவதற்காக நிர்மாணிக்கப்பட இருந்த செயற்கை உலர்த்தும் இயந்திரங்களையும் பயன்படுத்த முடியாத அளவுக்குப் பெருமழை, இடைவிடாது பெய்து வருகிறது!

30 உலர்த்தும் இயந்திரங்களில் இன்னும் 28 இயந்திரங்கள் நிர்மாணம் ஆகவில்லை!

அறுவடைக்கு அடுத்தடியாகக் கொள்முதல் அலுவல்களும் பெரிதும் தடைபடப்பட்டிருக்கின்றன!

"எதிர்பார்த்த இலக்குக் கொள்முதல், முன்கூட்டியே முடிந்து விடும்" என்று கருதப்பட்ட நிலையை, பருவ மழை பெரிதும் பாதித்திருக்கிறது!

"கொள்முதல் அலுவல்களில் எதுவும் குறுக்கிடவில்லை—பெருமழையைத் தவிர'' என்று, சென்னையில், தஞ்சை நிலைமைகள் பற்றி சிவில் சப்ளை கமிஷனர் கூறியுள்ளார்.

புதுவையில் மரைக்காயர் நீடிப்பாராம்!

"இப்போதிருக்கும் நிலையே நீடிக்கும்; ஒற்றுமையாகத் தொடர்ந்து இருக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன்''

என்று புதுச்சேரி அமைச்சரவைக் குழப்பம் பற்றிக் காமராசர் செய்தியாளர்களிடை தமது முடிவைத் தெரிவித்துள்ளார்.

வெங்கடசுப்பா ரெட்டியார் — பகுக் மரைக்காயர் ஆகிய இரு தரப்புக் காங்கிரசுக்காரர்களையும் காமராசர், அழைத்துப் பேசியிருக்கிறார்.

30 உறுப்பினர்களைக் கொண்ட புதுவைச் சட்டமன்றத்தில், காங்கிரசின் எண்ணிக்கை 20 ஆகும்.

முதல்வர் மரைக்காயர், ஊரில் இல்லாதபோது, இருமுறை சட்டமன்றக் காங்கிரசுக் கட்சியைக் கூட்டி, வெங்டசுப்பா ரெட்டியாரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் அளவுக்கு விரிவுக் கொண்ட புதுவைக் காங்கிரசு அமைச்சரவைப் பிரச்சினையில், இருதரப்பினரையும், 'ஒற்றுமையாக இருங்கள்' என்று கேட்டுக் கொண்டு, மரைக்காயரே தொடர்ந்து முதல்வராக இருக்குமாறு காமராசர் 'சமரசம்' செய்துவைத்தி[illegible]

[illegible]றது

[illegible]

[illegible]

[illegible]

நியூயார்க் --- மாண்ட்ரில் --- சென்னை

கண்காட்சி நடத்துவோர் கருத்துக்கும் கவனத்துக்கும்!

விஞ்ஞான ஆரவாரம்—பயனில்லாத ஆடம்பரம் ஆகியன இருந்தால் கண்காட்சியின் முடிவு வெறுமையாகத்தான் இருக்குமென்பதை மாண்ட்ரீலில் நடைபெறும் 'எக்ஸ்போ-67' கண்காட்சி, அறிவுரையாக வழங்கும் அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது.

கற்பனை வளமிக்க திட்டங்கள்—முன்கூட்டிய விளம்பரங்கள் இரண்டு மட்டும் இருந்தால், கண்காட்சியை நடத்தும் நாடும், நகரமும் நிச்சயம் பயனடையும்!

சிறிய அளவிலாதான் என்றாலும், சென்னையில் நடைபெறப் போகும் உலகக் கண்காட்சியின் பொறுப்பாளர்கள், மாண்ட்ரீல் பொருட்காட்சியின் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய பயனுடைய செய்திகள் நிறைய இருக்கின்றன!

இலட்சக்கணக்காகோர் வந்து—பார்த்து—அனுபவித்துவிட்டுப் போன பின்னர், பொருட்காட்சி நடைபெற்ற நகரத்துக்கு மிஞ்சியது என்ன? கிடைத்தது என்ன?—என்று பார்க்கும் நோக்கம், முக்கியமான திட்டமாக இருக்கவேண்டும்!

இந்த வகையில், நியூயார்க்கில் 1964—65-ம் ஆண்டுகளில் நடைபெற்ற—னதாவின் மாண்ட்ரீல் நகரில் நடந்து முடிகிற கண்காட்சிகளின் மூலம், சென்னைக் கண்காட்சிக் குழுவினர்

தெரிந்துகொள்ள வேண்டியவை
தவிர்க்கப்பட வேண்டியவை
(Do's & Dont's) ஏராளமாக உள்ளன!

★ கண்காட்சியில் பங்குபெறும் நாடுகள், எண்ணிக்கையில் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கமுடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக இருக்கவேண்டும்.

★ நமது பொருள்களுக்கு ஏற்றுமதி மார்க்கெட்டை, எந்த அளவுக்குக் கண்காட்சி பெற்றுத் தரும் என்பதுதான் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்,

★ 'எக்ஸ்போ' கண்காட்சியில் 60 நாடுகளும், நியூயார்க் கண்காட்சியில் துவக்கத்தில் 40 நாடுகளும் மட்டுமே பங்குபெற்றன என்பதை, சென்னைக் கண்காட்சியினர் நினைவிலிறுத்த வேண்டும்.

★ கண்காட்சிக்கு மக்களின் ஆதரவைத் தேடுவது அடுத்த முக்கிய செயல் நிட்டமாக இருக்கவேண்டும்; 'மக்கள் வரமாலா போய் விடுவார்கள்? மக்களுக்குத் தெரியாமலா போய்விடும்?' என்ற எண்ணம் கூடாது!

★ கண்காட்சியில் அமைக்கப்படும் கட்டிடங்கள், கூடுமானவரையில், நிரந்தரமான வகையில் இருத்தல் வேண்டும்; அருவாது, கண்காட்சி முடிந்த பின்னர், அந்த இடம், வாழும் பகுதியாக மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய வகையில் இருக்கவேண்டும்.

★ கண்காட்சியின் கட்டணம், 'மிக அதிகம்'—கண்காட்சிக்குச் செல்வது, 'அதிகச் செலவு ஆகக்கூடியது' என்று பொதுமக்கள் கருதும் நிலை இருக்கக்கூடாது!

மாண்ட்ரீல் கண்காட்சியில், உள்ளுக்குள் இலவசப் போக்கு வரத்து அளிக்கப்பட்டது என்பது, நினைவுகூரத்தக்கது!

நடந்து முடிந்த நியூயார்க், மாண்ட்ரீல் கண்காட்சிகளில்—முன்னது, 'நட்டத்தில் முடிந்தது' என்பதனை, இனி உலகக் கண்காட்சி நடத்துபவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, வருமானம் பற்றியோ, இலாபம் பற்றியோ முன் கூட்டியே நம்பிவிடோ, கூறுவதோ தவறுகும்!

கண்காட்சியின் காலமும் மிக அதிகமாக இருக்கக்கூடாது! இரண்டு ஆண்டுகள்வரை நீடிக்கப்பட்ட நியூயார்க் கண்காட்சியினை, கடைசி சில மாதங்களில் 'வேதனை'யாகக் கருதியவர்களும் உண்டு! மக்கள் மத்தியில் விருப்பம் இருந்து வருவையிலேயே முடிவுறப்போகும் மாண்ட்ரீல் கண்காட்சி போல், கடுமானவரையில், குறுகிய காலத்திறகு மட்டுமே கண்காட்சி நீடிப்பது நல்லது!

அனைத்தையும்விட முக்கியமான ஒன்று;—கண்காட்சி நடத்துவோர், பத்திரிகைகளுடனே, பத்திரிகைக்காரர்களுடனே கோபதாபம் காட்டுவது கூடாது! நியூயார்க் கண்காட்சியின் பத்திரிகைத் துறைத் தலைவர் இதனால் பட்டபாடு என்ன என்பதை, மற்றவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்!

கண்காட்சிக்கான விளம்பரம், பத்திரிகைகளை வைத்துத்தான் இருக்கிறது; அதை எந்த வகையிலும் பாழடித்துக்கொள்ளக் கூடாது!

—[மாண்ட்ரீல் நகரத்தின் 'எக்ஸ்போ—67' கண்காட்சி பற்றி 'இந்து' இதழின் அமெரிக்க நிருபர் ஈசுவர் சாகர் எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகள்—தமிழாக்கம்.]

ஏற்மையிலிருந்து மீள வேண்டுமானால்...!

"இங்காட்டில் எவ்வளவோ இயற்கை வளங்கள் இருக்கும், ஏழ்மையைப் போக்க முடியவில்லை! அதிலிருந்து மீள வேண்டுமானால், மனிதனுடைய அறிவையும் ஆற்றலையும் ஆக்கவேலையில் ஈடுபடுத்த வேண்டும்.

"பட்டப் படிப்பினால் பயனில்லை! பயனுள்ள வேலைகளில் ஈடுபட வேண்டும்!

"இந்த அரசு கலவிக்காக ரூ. 54 கோடி செலவிடுகிறது. ஆயிரம் அன்னை தத்திரம் ஏற்படுத்துவதையும் 16 ஆயிரம் கோயில்கள் எழுப்புவதையும் விட ஒரு பள்ளிக்கட்டிடம் கட்டுவதுதான் சிறந்தது,

"தொழில் செய்வதன் மூலம் தான் மனிதன் முன்னேற்றம் அடையமுடியும்."

—அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

தூதரகங்களில் சிக்கன நடவடிக்கை

இலாகாக்களின் எதிர்ப்பு

புதுடில்லி, அக். 20—மற்றும் பல வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் சிக்கனத்தை அமல்படுத்துவதற்கான திட்டத்தை சீனியர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உள்ளூரில் வேலைக்கு எடுக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையையும், அத்தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட இந்திய அதிகாரிகளின் எண்ணிக்கையையும் குறைக்க ஆட்குறைப்பு—கட்டாய ஓய்வு ஆகிய வழிகள் மூலம் சிக்கனம் செய்வதென்பது திட்டமாகும்.

நிர்வாக வேலையைச் சீரமைத்து முக்கிய இடங்களில் ஊழியர்கள் அதிகரிப்பதைத் தடுப்பது அத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆனால் இத்திட்டம் குறித்து இந்திய வெளிவிவகாரத் துறையிலும், மற்ற அமைச்சகங்களிலும் கடும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தூதரகங்களுக்குத் தங்கள் அதிகாரிகளை அனுப்பியுள்ள சில துறைகள் அவர்களைத் திரும்பப் பெற மறுக்கின்றன.

இந்த நிலைமை குறித்து எரிச்சல் கொண்ட ஒருவர், 'வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள தங்கள் சிப்பந்திகளின் எண்ணிக்கையைக் குறைக்க மற்ற அமைச்சகங்கள் நடவடிக்கை எடுக்காத வரையில், தூதரகச் செலவைக் குறைக்க வெளிவிவகார அமைச்சகத்தால் எதுவும் செய்யமுடியாது' என்றார்.

கள்ள நோட்டுகள் பெருக்கம்!

கலகத்தா, அக். 18—"இந்திய ரிசர்வ் பாங்கிக்கு 1966—67-ம் ஆண்டில் ஒரு ரூபாய் நோட்டுகள் உட்பட 3,233 கள்ள நோட்டுகள் வந்தன; முந்திய ஆண்டில் அவை 2,672 நோட்டுகளாயிருந்தன" என்று அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்த நோட்டுகளின் மதிப்பு 1966—67-ம் ஆண்டில் ரூ. 40,482; 1965—66-ம் ஆண்டில் ரூ. 42,279.

கடந்த பத்தாண்டுகளில், ரேஷனில் கள்ள நோட்டுகள் அரம்பட்டது 1963—64-ம் ஆண்டிலாகும்; அப்போது ரூ. 9,01,787 மதிப்புள்ள 10,917 கள்ள நோட்டுகள் ரிசர்வ் பாங்கிக்கு வந்தன.

கல்விக்காக ரூ. 500 கோடி!

கலகத்தா, அக். 19—"மாநில அரசுகள், நடப்பு நிதியாண்டில் வருவாயக் கணக்கிலிருந்து சுமார் ரூ. 500 கோடியைக் கல்விக்காகச் செலவிடும்" என்று அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

கல்விக்காக 1965—66-ம் ஆண்டில் ரூ. 372 கோடியே 90 இலட்சம் செலவாயிற்று; 1963—67-ம் ஆண்டிற்கான திருந்திய மதிப்டு ரூ. 442 கோடியே 20 இலட்சமாகும். 1967—68-ம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட மதிப்டு, ரூ. 495 கோடியே 80 இலட்சமாகும்.

கன்னடக் கலைக் களஞ்சியம்

பத்தாண்டுச் சாதனை!

ஒரு வளர்ச்சிபெற்ற மொழியின் சின்னமாக விளங்குவது கலைக் களஞ்சியம் (Encyclopaedia) இப்படிப்பட்ட கலைக் [illegible]ரிய நூல்களே இல்லாத [illegible]திய மொழிகள் மூன்று [illegible]ன; அவற்றில் ஒன்று கன்[illegible]ம்.

கலைக் களஞ்[illegible]மைக்கும் வேலையை [illegible] அரசு பத்து ஆண்டுகளுக்[illegible]ன்புதான் துவக்கியது; ஆனாலும், இது தொடர்பான தொடக்க வேலைகளைக் இதுவரை முற்றுப் பெறவில்லை!

இந்தத் திட்டத்திற்கு ஆகக்கூடிய செலவை (ரூ. 25-இலட்சம்) மாநில அரசு மூன்றாண்டுகளுக்கு முன்பாகத்தான் அனுமதித்தது!

இதற்காக 22 துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன!

பல்வேறு துறைகளைப் பற்றிய செய்திகளைக் குறித்து 30,000 தலைப்புகளில் விளக்கக் கட்டுரைகள் தயாரிப்பது என்று திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள் 6,000 கட்டுரைகள்கூட, இதுவரை வந்து சேரவில்லை என்று கூறப்படுகிறது.

மாவும் வேம்பும் ஒன்றுகுமா?

"பேச வேண்டாம்; தட்டி எழுதி வையுங்கள்' என்று சொன்னார்ரா குமாரசாமி! தட்டிதான் வைத்துப் பார்க்கட்டுமே! அவர்கள் வைப்பதை விட பெரிய தட்டிகள் பக்கத்திலே வாரதா?

"1947-ல் அரிசியின் விலை இருந்த நிலை என்ன?—1967-ல் காங்கிரசு ஆட்சியில் அரிசி விற்ற விலை என்ன என்று—எழுதி வைக்கமாட்டோமா?

"உலகமே இன்று திடுக்கிட்டுச் சொல்கிறதே — 'காங்கிரசு ஆட்சியில் ஏறிய விலைகளைப் போல எங்குமே ஏறியதில்லை' என்று! பக்கத்திலே உள்ள பாகிஸ்தானில்கூட இந்த அளவு விலை ஏறவில்லையே! அடிக்கடி அமளிகளைச் சந்திக்கும் பர்மாவிலே உண்டா இது போல அக்கிரமம்?—அது இப்போது, இராணுவ ஆட்சிக்கு உட்பட்ட நாடு! 'இந்தியாவிலும், இந்தோனேஷியாவிலும் மட்டுமே இப்படி விலை வாசி ஏறறம ஏறபட்டது' என்று ஐக்கிய நாடுகள் சங்கம் சொல்லியுள்ளதே!

"அத்தகைய நிலையில் இங்கு அவர்கள் விட்டுச்சென்றுர்கள்; அதைக் குறைக்க நாங்கள் முயன்றுவரும் நேரத்தில், அவர்கள் (டிலலி காங்கிரசு ஆட்சியினர்) என்ன செய்கிறார்கள்? போன வாரம்கூட 90 கோடி ரூபாய்க்கு நோட்டு அடித்துப் புழக்கத்தில் விட்டிருக்கிறார்கள்! பணவீக்கத்தை மேலும் அதிகமாக்குகிறார்களே—இது நியாயமா?

"சந்தேகமிருந்தால், தமிழ் நாட்டின் தேவைக்கு இங்குள்ள மக்களுக்கான காரியங்களைச் செய்துகொள்ளத் தேவையான அளவுக்கு நோட்டு அடித்துக்கொள்ளப் பத்து ஆண்டு அனுமதி கொடுக்கட்டுமே—கொடுப்பார்களா? இவர்களிலிட அழகாக அல்லவா நோட்டுப் போடுவோம்!

"நோட்டு அடிப்பது குறைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம்' இதை உணராது, 'தட்டி எழுதி வை' என்றால், 'முன்னுலே நடக்க விட்டு'ப் பின்னுலே காலைப் பிடித்து இழுப்பது போலத்தானே ஆகும்?

"நாங்கள் கையாளுகிற பிரசார முறை என்பதால், அதையே அவர்களும் கையாண்டால் பலன் வந்து விடாது!

"வேப்ப மரத்துக்கும்—மாமரத்துக்கும் விடப்படுவது தண்ணீர்தானென்றாலும், ஒன்று வேப்பங்காயைக் கொடுக்கின்றது—பறவைகள் தின்ன! மற்றொன்று மாங்கனியைக் கொடுக்கின்றது! இந்தச் சாதாரண இயற்கை உண்மையைக் காங்கிரசுக்காரர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்!"

--அறிஞர் அண்ணு

(நகுபலலிக்கேனி கூட்டத்தில்)

உரிமையை இழந்துவிட ஒப்போம்!

தமிழக அரசின் நிலையை டில்லி உணரட்டும்

"நாம் எதற்கெடுத்தாலும் டில்லியிடம் கேட்பதாகவும—எதற்கெடுத்தாலும் டில்லியிடம் கோரித்துக் கொள்வதாகவும் குறை கூறுமிருர்கள்.

"நமது நாட்டில் வருவாகும் வரிப் பணத்தில் பெரும் பகுதியை டில்லிக்குக் கொடுக்கிறோமே. அப்படி இருக்க டில்லியிடம் கேட்காமல் நாம் எங்கே கேட்பது? நனனுடைய தேவைக்கு அதிகப்படியான நிதி பெற தமிழ் நாட்[illegible] உரிமை உண்டு.

சர்க்[illegible]

[illegible]தும் மத்[illegible]க்கே போகிறது; அதில் ஓரளவு நமக்குத் தருகிறுர்கள்; அதை நான் மறுக்கவில்லை; ஆனுலும், அந்தப் பணம் அங்கு போய், பிறகு தான் நாம் அதைப் பெறுகிறோம்! குளத்திலுள்ள மீனை நாரை தின்றபின், அந்த நாரையின் வாயை மூங்கில் குச்சியால் பிளந்து—பிறகு அந்த வாயில் இருந்து கிடைக்கும் இரண்டொரு மீனை எடுத்து கும்பிடு வைப்பது போன்றதாகும் இது!

டில்லியிடம் பணம் கேட்டு வாங்க நமக்கு உரிமை இருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு தமிழகத்து மக்கள் கட்டும் பணம் தமிழ்நாட்டுக்குக்கிடைப்பதில்லை. அதில் தமிழ்நாட்டு மக்கள் கட்டும் பணம் முழுதும் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் என்றுல், பத்து ஆண்டுகளில் தமிழ் நாட்டைத் தொழில் வளமிக்க நாடாக்கிவிட முடியும்!

அந்தப் பணத்திலிருந்து அவர்கள் நமக்குக் கடன் தருகிறுர்கள்; அதற்காக ஒரு முறை [illegible]க்கிறுர்கள்; [illegible]நாட்டிலிருந்து [illegible]பணம் இன[illegible]ப்பட்டு போகாதிருக்கு[illegible] தமிழக அரசுக்கு [illegible]ருள் [illegible]தரன்சு மூலம் மட்[illegible] ஒன்றுக்கு நூறு [illegible] நூறு கோடி ரூபாய் [illegible]மானம் கிடைக்கும். ஆனு[illegible] அரசியல் சட்டம் அதி[illegible] இடம் தரவில்லை. இதை[illegible]நான் கூறுவது டில்லி மீது [illegible]எனக்குக் கோபமோ கசப்[illegible]மா ஏற்படுவதால் அல்ல—நம் [illegible] நிலைமை மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான்!"

--அறிஞர் அண்ணு

55 இலட்சம் பேருக்கு வேலை

மேற்குப் பாகிஸ்தானத்தில் வேலையிலாத்திண்டாட்டத்தைப் போக்குவதற்காகத் திட்டக் குழு நடப்புத் திட்ட காலத்தில் சுமார் 55 இலட்சம் பேருக்குப் புதிய வேலை வாய்ப்புகளை உண்டாக்கித் தருமாம்.

இருப்பினும், இதனுல் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைத்து விடாதாம்; அதற்கு 1985-ம் ஆண்டுவரையில் காத்திருக்க வேண்டுமாம்.

கட்சி சனநாயகம்

சலித்துவிட்டது காங்கிரசு கட்சிக்கு!

'குடியரசுத் தலைவர் நிர்வாகம் வேண்டும்' என்கிறார் எஸ். என். மிஸ்ரா

ஜபல்பூர் காங்கிரசு மாநாட்டுக்குத் தீர்மானம்

"இப்போது இருக்கும் கட்சி முறை சனநாயகத்தை நீக்கிவிட்டு, குடியரசுத் தலைவர் நிர்வாக முறையை இந்திய அரசியலில் அறிமுகப்படுத்த வேண்டும்"

எனக் கோரும் தீர்மானம் ஒன்றினை, என். எஸ். மிஸ்ரா, நடைபெறவிருக்கும் ஜபல்பூர் காங்கிரசு மாநாட்டில் தாக்கல் செய்துள்ளார்.

எஸ். என். மிஸ்ரா, காங்கிரசுப் பாராளுமன்றக் கட்சியின் துணைத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜபல்பூர் மாநாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரச் சார்பற்ற தீர்மானங்களில், மிஸ்ரா வின் தீர்மானம் இரண்டாவது முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது.

இப்போது திட்டக் குழு உறுப்பினராகப் பதவி பெற்றிருக்கும் தமிழகத்துக் காங்கிரசுக்காரர் ஆர். வெங்கடராமன், இதே போன்ற கருத்தினைப் பலமுறை வலியுறுத்தி வந்திருப்பதும் இங்கு நினைவூகூரத்தக்கது.

"1967-ம் ஆண்டின் நான்காம் பொதுத் தேர்தல்—கட்சிகள் முறை சனநாயக அரசியலுக்கு உறுதியளிக்கும் வகையில்—அரசியல் கட்சிகளின் வளர்ச்சிகளைப் பிரதிபலிக்க விலை" என்பது மிஸ்ராவின் தீர்மானம் உள்ளடக்கிய பொதுத் கருத்தாக இருக்கிறது.

காங்கிரசு அனைத்திந்தியக் கட்சியாக இருந்தும், தேர்தலில் பெற்றுள்ள சரிவே—மிஸ்ரா போன்றவர்கள், புதிய கண்ணோட்டத்தில் சனநாயக நிர்வாகம் பற்றிச் சிந்திப்பதற்கு காரணமாக இருக்கக்கூடும்—என, பார்வையாளர்களில் சில தரப்பினர் கருதுகின்றனர்!

மூடப்பட்ட ஆலைகட்குப்பணவுதவி

தமிழக அரசின் உறுதிமொழி

சென்னை, அக். 20—

தமிழ்நாட்டில் மூடப்பட்ட அல்லது சரிவர நடத்தமுடியாத நிலையில் உள்ள 15 துணி ஆலைகளை இயங்கச் செய்ய அவற்றுக்கு வர்த்தக பாங்கிகள் கொடுக்கும் கடன்களுக்கு உறுதி அளிக்கும் பொறுப்பைத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த உறுதியின்கீழ் அடங்கும் மொத்தத் தொகை ரூ.1,10,78,000 ஆகும்; அவை 'வோகாநன்குழு' என்பதுடன் நியுனர் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளன.

கடன்களுக்காகச் சிபாரிசு செய்யப்பட்ட 15 ஆலைகளில் 10 ஆலைகள் கோவை மாவட்டத்தில் உள்ளன; திருச்சிராமவட்டத்தில் இரண்டும், மதுரையில் ஒன்றும், திருநெல்வேலியில் ஒன்றும், சன்னியாகுமரியில் ஒன்றும் உள்ளன.

மதுரை, வாலாசாபாத், கோவை ஆகியவற்றிலுள்ள 3 ஆலைகளுக்கு நிதி உதவி மறுக்கப்பட்டுவிட்டது; 'அவற்றுக்குக் கடன் வசதி அளிக்தாலும் அந்த ஆலைகளால் மீண்டும் செயல்பட முடியாது' என்று குழு கருத்துத் தெரிவித்ததேஅதற்குக் காரணம்.

நிதி உதவிக்கான உறுதிப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர், அந்த ஆலைகள், அரசு விதிக்கும் சில நிபந்தனைகளை ஏற்றாகவேண்டும். ஆலைகளின் டைரக்டர்கள் போர்டில் அரசு நியமிக்கும் பிரதிநிதி ஒருவருக்கும், கடன்களிக்கும் பாங்கியின் பிரதிநிதி ஒருவருக்கும் இடமளித்தாக வேண்டும் என்பது நிபந்தனைகளில் ஒன்றாகும்.

தவிர அந்த ஆலைகள், மாநில அரசு நியமிக்கும் தொழில் நுட்ப—பொருளாதார அமைப்பு அவ்வப்போது மேற்கொள்கிற பரிசீலனைக்கு உடன்பட்டாக வேண்டும்.

உணவு--வேளாண்மை உரைக்கோவை

அண்ணா--ஏ. கோவிந்தசாமி பங்கேற்கும் நிகழ்ச்சி

சென்னை, அக். 18—

[illegible]க வேளாண்மைத் துறை [illegible]ச்சார் திரு. ஏ. கோவிந்த[illegible]னவு வேளாண்மை பற[illegible]ரைக் கோவை ஒன்றை [illegible]காகா பிரகாஷ் விடுதி[illegible]ள் காலை 10-30 மணிக்கு[illegible]கிவைப்பார்.

தமிழக [illegible]ரசும்—அமெரிக்கத் தகவல் நிலையமும் (யு.எஸ்.ஐ.எஸ்.) கூட்டாக இந்த உரைக்கோவைக்கு ஏற்பாடு செய்துள்ளன.

50க்கு மேற்பட்ட வேளாண்மை உணவு அதிகாரிகள், ஊட்ட நிபுணர்கள், விவசாயிகள், சாகுபடி சம்பந்தப்பட்ட தொழில்களின் பிரதிநிதிகள், இந்த உரைக் கோவையில் கலந்துகொள்வர்.

உணவு உற்பத்தி, ஊட்டம் முதலியவற்றில் கையாளப்படும் புது வழிகள்--முறைகள்--தொழில் நுட்பங்கள் முதலியன இந்த உரைக் கோவையில் விவாதிக்கப்படும்.

தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் சி. ஏ. இராமகிருஷ்ணன் தலைமைதாங்க--உரைக் கோவையில் பங்கெடுத்துக்கொண்டவர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் ஒரு பொது விவாதத்துடன் உரைக் கோவையும் முடிவுறும்.

இந்த உரைக் கோவையை யொட்டி கண்காட்சி ஒன்றும் நடக்கும்; 'நீரிலமை காணும் முயற்சி' என்ற இக்கண்காட்சியை முதலமைச்சர் அண்ணா அவர்கள், இராஜாஜி மண்டபத்தில் திறந்துவைப்பார்.

40 படத் தொகுப்புகள் கொண்ட இந்தக் கண்காட்சியை, 23-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை பார்க்கலாம்.

எல்லை படைகளை சீனா வலுப்படுத்துகிறது

மேற்ில் சுரடுமுரடான மலைகள் செறிந்த 400 மைல் நீளத்திற்கும் அதிகமான இந்திய - திபேத்திய எல்லை நெடுகிலும், சீனர், தமது படைகளைச் வலுப்படுத்திவருகின்றனராம்.

வடகிழக்குப் பகுதியில் படைகளின் நடமாட்டம் தீவிரமாகி இருக்கிறதாம்.

"எல்லையில் இவ்வாறு திடீரென்று சீனர்கள் தீவிரம் காட்டுவதன் நோக்கம் என்னவென்பது தெரியவில்லை; ஆனால் பெரிய மோதல் எதுவும் ஏற்படாது" என்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

"உள்நாட்டு விவகாரங்களில் அப்படியே மூழ்கிப் போய்விடலிலை; மற்றொரு சுற்றுச் சண்டைக்கு ஆயத்தமாகிறோம்" என்று அண்மை நாடுகளுக்குக் காட்டுவதற்காகச் சீனா தனது பலத்தைக் காட்டுகிறது என்பது, இதற்குத் தரப்படும் ஒரு விளக்கமாகும்.

நமது நோக்கும்--நாட்டு நடப்பும்

"மத்திய அமைச்சரவையில் மாற்றம் இருக்குமா?—கட்சித் தேர்தலை எதிர்பார்க்கிறார் இந்திரா! 'இப்போதைக்கு இல்லை' என்பதன் காரணம் இதுதான்!

அடுத்த நாடாளுமன்றக் கூட்டம்—காங்கிரசுத் தலைவர் தேர்தல்—இரண்டுக்காகவும் அவர் காத்திருந்து [illegible]லும் [illegible]ல்லை!

ஏனெனி[illegible] மாற[illegible]
இருக்கி[illegible]

இப்போதைக்[illegible] மாற்றத்தைச் செய்துவிட்டு, அப[illegible]போது எழும் [illegible]ளே, 'வீணுக்கி'விட இந்திரா தயாராக இல்லை!"

—('நம் நாடு' (21—9—67) 'செஃபி நோக்கும்' பகுதி

★

"டிசம்பர் மாதத்[illegible] முதல் வாரத்தில் காங்கிரசுத் தலைவர் தேர்தல் நடைபெ[illegible] இருக்கிறது. இம்மாத இறுதியில் நடைபெறும் ஜபல்பூர் [illegible]சியற்குழுக் கூட்டத்தில் இதுபற்றிய ஒரு முடிவு எடுக்கப்[illegible].

"காங்கிரசுக் தலைமைக்கு யார் வருவது என்று தெளிவு ஏற்படாத வரையில், மத்திய அமைச்சரவையில் ஏற்பட இருக்கும் மாற்றமும் நடைபெறாது!"

—('இந்து' இதழில் (19—10—67) கே. ரங்கசாமி

ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கத் திட்டம்

மதுரை மாவட்டம் வரட்நாடு பகுதியிலுள்ள 40,000 ஏக்கர் பூம்போக்கு நிலத்தை ஏழை விவசாயிகளுக்கு வழங்கத் தமிழக அரசு முடிவு செய்து விட்டது. அங்கு ஏற்கனவே விவசாயம் செய்துவந்த விவசாயிகளுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு—ஒரு கும்பத்திற்கு 5 ஏக்கர் வீதம்—பிரித்துக் கொடுக்கப்படும்; இதற்காகத் தனி அதிகாரி நியமிக்கப்பட்டுருக்கிறார். நிலத்தைப் பிரித்துத் தர இப்போது 'சர்வே' வேலை நடந்து வருகிறது.

"அரசாங்கப் புறம்போக்கு நிலங்களைக் கோரி இதேபோல மற்ற மாவட்டங்களிலுமிருந்து அரசாங்கத்துக்குப் பல மனுக்கள்வந்து குவிந்துள்ளன; இவை பற்றி பரிசீலனை நடக்கிறது.

சேலம் மாவட்டத்தில் 'பக்கநாடு வனவாசி' பகுதியில் 6 ஆயிரம் ஏக்கர் நிலமும், கோவை மாவட்டத்தில் பவானி சாகரில் நாலாயிரம் ஏக்கர் நிலமும் ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும்.

இனி அனுமதியோம்!

"இனிமேல் அரசாங்கப் புறம்போக்கு நிலத்தை, எவராக இருப்பினும் ஆக்கிரமிக்க விடமாட்டோம்; அப்படி யாரேனும் மீறி நடந்தால் அவர்கள் மீது வன தத்துவமியினர் நடடிக்கை எடுப்பார்கள்."

--அமைச்சர் ஏ. கோவிந்தசாமி

'இந்தியாவில் மாஸ்கோவின் கரங்கள்'

புத்தக விற்பனை நடிக்கிறது

பீடர் சாகர் (Peter Sagar) எழுதி 'சுவிஸ் ஸ்டோன் இன்ஸ்டிடியூட்' நிறுவனம் வெளியிட்டிருக்கும் 'மாஸ்கோஸ் ஹேண்ட் இன் இண்டியா' என்னும் புத்தகம், இனி, இந்தியக் கடைகளில் விற்பனைக்குக் கிடைக்காது!

விளம்பர நிறுவனம் தொடுத்திருந்த புகார் வழக்கு ஒன்றின் விளைவாக, புதுடில்லி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு வெளியே இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில், 'இந்தியாவில் எந்த முறையிலும் இதைப் பத்தகத்தை வெளியிடுவதில்லை' என வெளியிட்டாளர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர்.

வழக்கு தொடுத்திருந்த விளம்பர நிறுவனத்தைப் பற்றிய ஆட்சேபகரமான பகுதிகள், அந்தப் புத்தகத்தில் இருந்து தாக்கக் கூறப்படுகிறது.

பணக்காரப் பிச்சைக்காரன்

நசர் பாபா என்ற அறுபது வயதுக் கிழவன்தான், பாவிஸ் தானத்திலேயே பெரிய பணக்காரப் பிச்சைக்காரனுக்குக் கருதப்படுகிறான்! பிச்சை யெடுக்கும் தொழில் அவன் விட்டுவிடமாட்டானாம்!

அவன் கடந்த 30 ஆண்டுகளாகப் பலரறிந்த புள்ளியாகப் பெஷாவரில் வாழ்ந்துவருகிறான். அவனுக்கு அங்கநிலப் பல வீடுகள் சொந்தமாயிருக்கின்றனவாம்; கிராமத்தில் பரந்த வேளாண்மை நிலம் இருக்கிறது; இவை அனைத்தும் அவன் பிச்சையெடுத்துச் சம்பாத்தியவையாகும்.

ஒய்வு நேரத்தில் அவன், 'ஏழை மக்களின் பாங்கர்' ஆக இருக்கிறான்; அதாவது, நகரின் ஏழை மக்களுக்குக் கூட்டு வட்டியில் கடன் கொடுத்து வருகிறான்!

அவனுக்குப் பிச்சையெடுப்பது—கிடைத்திருந்து வரும் வருவாய்—வீட்டு வாடகை—வட்டி—என்று, மாதத்தில் ரூ. 2,000-க்கும் அதிகமாகக் கிடைக்கிறது; பாங்கியிலும் அவன் 'பெருந்தொகை போட்டு வைத்திருக்கிறான்!

சென்னை 94-வது வட்ட நாவலர் மன்றம்

8—10—67 இரவு 8 மணியளவில் சென்னை 94-வது வட்ட தி.மு.க. துணை செயலாளர் ந. மு. வாமணன் அவர்களை ஆணையராகக்கொண்டு மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; விவரம் :—தலைவர்: கோ. பு. கோவிந்தசாமி; துணைத் தலைவர்: பி. கோபாலகிருஷ்ணன்; செயலாளர்: பி. வேணுகோபால்; துணைச்செயலாளர்: பொ. சா. வெங்கடாசலம்; பொருளாளர்: ஏ. வேணுநாக்தன்; துணைப்பொருளாளர்: வி.சுப்பிரமணியம்; மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பொள்ளாச்சி அண்ணா மன்றம்

4—10—67 அன்று பொள்ளாச்சி நகர தி.மு.க. செயலாளர் தி. இராமசாமி தலைமையில், 12-வது வட்ட அண்ணா மன்றத் துவக்க விழா நடைபெற்றது. அது போது, ஜி. சுப்பிரமணியம் அவைத் தலைவராகவும், எஸ். அஸீபா செயலாளராகவும், எஸ். கோபால் துணைச்செயலாளராகவும், பி. என். விசுவநாதன் பொருளாளராகவும், மற்றும் கே. சங்கர், கே. கிருஷ்ணன், கே. இமாம், ஆர். நாராயணசாமி, ஜி. மணி, எம். வெள்ளச்சாமி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாலர் அரங்கம்

அக். 22-ந் தேதி பிற்பகல் 2-மணி ; மாலை 4-15 மணிக்கு

டார்ஜானும் நியூயார்க் வீரச் செயல்களும்

(எம்.ஜி.எம். முழு நீளப் படம்)

கட்டணம் வழக்கம்போல

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

வட சென்னை வியாபாரிகள் சங்கம்

முன்னாள்தலைவர் படத்திறப்பு

வட சென்னை வியாபாரிகள் சங்கத்தின் 1966—67-ம் ஆண்டைய தலைவர் இ. வி. ஏ. சுப்பிரமணிய (முதலியார்) உருவப் படத்தை, சங்கக் கட்டிடத்தில் 15—10—67 அன்று முன்னாள் அமைச்சர் க்கன் திறந்துவைத்தார்.

விழாவுக்கு திரு. எஸ். எஸ். மாரியப்பன் தலைமைவகித்தார்.

திரு.சுப்பிரமணியம் அவர்களின் சேவையைப் பாராட்டியும், வியாபாரிகள் அனுபவித்துவரும் குறைகளை எடுத்துச் சொல்லியும் திருவாளர்கள் இராசபாண்டியன், சிவலிங்கம், பி. ஏ. கே. பழனிச்சாமி, பி. கே. மாரியப்பன், என். வி. எஸ். நாகலேல், சாமுவேல் சுந்தராசன், சி. என். இராசாத்தினம், கே. இராமதாஸ் எம்.எல்.சி., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., எம். மாயாண்டி, எம். வேதாசலம் எம்.எல்.ஏ., டி. பி. ஏழுமலை ஆகியோர் பேசினார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து திரு. சுப்பிரமணியனார் பேசினார்.

மதுரை எழுத்தாளர் மன்றம்

மதுரை எழுத்தாளர் மன்றச் செயற்குழுக் கூட்டம், 15—10—67 அன்று நடைபெற்றது. பேராசிரியர் பெருமாள் எம்.ஏ.பி.டி. தலைமை தாங்கினார்.

சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழராராய்ச்சி மாநாட்டின் சிறப்புக்கள் பற்றி விவாதிக்கப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன :—

மதுரை எழுத்தாளர் மன்றச் சார்பில் மாநாட்டில் ஐந்து உறுப்பினர்கள் கலந்துகொள்வது.

உலகத் தமிழராராய்ச்சி நடைபெறும் நாட்களை அரசினர் பொது விடுமுறை நாட்களாக அறிவிக்கும்படி தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

தமிழராராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் பதிவு பெற்ற நிறுவனங்கள், கலவி நிலையங்கள் சார்பில் கலந்துகொள்ளும் அன்பர்களுக்கு, புகைவண்டிக் கட்டணச் சலுகை வழங்குமாறு தென் பகுதி புகைவண்டித் தொடர் நிறுவனத்தினரை மன்றம் கேட்டுக்கொள்கிறது; இத ற்கு ஆவன செய்யும்படி தமிழக அரசை மன்றம் வேண்டிக்கொள்கிறது.

உலகத் தமிழராராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் சான்றோர்கள் மதுரை வருகையோது அழைத்துப் பாராட்டுவதென மன்றம் தீர்மானிக்கிறது.

செயலாளர் புத்தநேரி மதிவாணன் நன்றி கூவினார்.

கலை நிகழ்ச்சி

சென்னை 92-வது வட்டம் கோடம்பாக்கம் 'கண்ணு மேல்திரி தியலில், 22—10—67 இரவு 7-மணிக்கு செ. கண்ணப்பன் தலைமையில், சிவகங்கை சேதுராசன் குழுவினரின் பல நூறல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

தி. மு. கழக இடைத் தேர்தல்கள் -- நகராட்சித் தேர்தல்கள் நிதி

கழகத் தேர்தல் நிதியாகத் தலைமைக் கழகத்திற்குக் கிடைத்துள்ள தொகை விவரம் வருமாறு:—

	ரூ. காசு
சென்னை பொதுக்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப திருச்சி மாவட்டக் கழகத்தின் சார்பில்—மாவட்டச் செயலாளர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் கழகப் பொருளாளரிடம் சேர்ப்பித்த தொகை	8,550.00
சென்னை--காசிமேடு தோழர் இராசு அவர்களின் புது மனை புகுவிழா நிகழ்ச்சியில் 13—9—67 அன்று பொருளாளர் மு. கருணாநிதி அவர்களிடம் தரப்பட்டது	51.00
சென்னை 47-வது வட்டம் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில் திரு. வி. க. தெரு தோழர் நடராசன் அவர்களால் தோழர் மைனர் மோசஸ் அவர்களிடம் அளிக்கப்பட்ட தொகை	51.00
கழக இசை நிகழ்ச்சியாளர் திருவாரூர் முருகு பாண்டியன் செய்லோ நிகழ்ச்சியின்போது உண்டியல் மூலம் வசூலித்தது	50.00

—பொருளாளர் தி.மு.க.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

22--10--67

புதுக்கோட்டை

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு திருகோகர்ணம் சத்தியமூர்த்தி திடலில்; தலைவர்: கரு. கணேசன்; பேசுவோர்: நன்னிலம் நடராசன், அ. தியாகராசன், பா. செழியன், டாக்டர் செளமிய நாராயணன்.

கும்பகோணம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு சாரங்கபாணி தெற்கு வீதியில்; தலைவர்: ச. கோதண்டராமன் பி.காம., பி.எல்.; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பூ. நாராயணசாமி, கோ. சி. மணி, சு. பத்மநாபன், பி.வி. செயராமன் எம்.ஏ.,எம்.சி., எஸ். ஆர். இராதா எம்.சி., எம். பழனிச்சாமி எம்.சி., ப. கோதண்டபாணி எம்.சி., ப. நாகராசன்.

23--10--67

ஆம்பூர்

தி. மு. கழகச் சார்பில் மாலை 6 மணிக்கு வளையக்கார வீதியில்; தலைவர்: மு. இராமலிங்கம்; பேசுவோர்: வெ. கண்ணன், ஜீவா கலைமணி, ஆர். சம்பங்கி, எம்.பளனிச்செல்வம் எம்.எல்.ஏ., ஜி. வி. முனிரத்தினம் பி.ஏ. பி.எல்.

சென்னை 53-வது வட்டம்

தி. மு. கழகச் சார்பில் இரவு 7 மணிக்கு கொகநதபுரம் பள்ளிக் கூடத் தெருவில் (செத்துப்பட்டு இரயிலடி அருகில்); தலைவர்: மா. சு. மணி; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.ஏ., எம். ஏ. பழனி எம்.சி., இரா. நடராசன், க. இலக்குமணன்.

குமாரபாளையம்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு சந்தைப் பேட்டை திடலில்; தலைவர்: வி. ச. கனகராசன்; பேசுவோர்: கி. ஆ. பெ. விசுவநாதம், எம், எஸ். பி. இரஞ்சிதமணி பி.காம்., தி. கு. சண்முகக்.

இராயபுரம் முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆதிரையாகவும், வெளியிடுவராகவும், அச்சேடுவராகவும் கொண்டு, ஆழுவி அச்சகத்தில் (24, ஆதிநாராயண நகர மெய்க்குத் தெரு, சென்னை-4) ஆசிரியர் நாகூரான் மேஜிஸ்டிரேட் அவர்கள் பதிப்பிக்கப்பட்டது.

மாணவர் இலக்கிய மன்ற தொடக்க விழா

சென்னை — காக்ரேன் பேசின் சாலை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத் தொடக்கவிழா, 23—10—67 மாலை 3 மணிக்கு தண்டையார் கிருட்டிணமூர்த்தி தலைமையில் நடைபெறும்; திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுவார்.

அண்ணா நற்பணி மன்றத் திறப்பு விழா

சென்னை—வண்ணை சிமிட்டரி ரோடு, இராபின்சன் பூங்காவில் 22—10—67 காலை 8 மணிக்கு அண்ணா நற்பணி மன்றத் திறப்பு விழா நடைபெறும்; மு. வேதாசலம் எம்.எல்.ஏ., மன்றப் பெயர்ப் பலகையைத் திறந்துவைப்பார்; டி. வெங்கடேசன் எம்.சி. கொடியேற்றுவார்; கே. இராமலிங்கம் எம்.சி. அண்ணா உருவப் படத்தைத் திறந்துவைப்பார்.

வெல்லம் ஏற்றுமதி:

தமிழக அரசு

தடை செய்வதற்குக் காரணம்?

உணவு அமைச்சர் விளக்கம்

சென்னை, அக். 21—

தமிழகத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு வெல்லம் அனுப்புவதைத் தடை செய்வது எனத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது; இதன் அமுல் நடந்து வருதற்கான விவரங்களைத் தயாரிப்பதில் அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. இந்தத் தடையுத்தரவு எப்போது அமுலுக்கு வரும் — எப்படி அமுல் நடத்தப்படும் என்பவைகளைக் குறிப்பிடும் அவசியமான உத்தரவுகள் விரைவிலேயே பிறப்பிக்கப்படும்.

தமிழக அரசு இந்த உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கான காரணங்களை, உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

"கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் வெல்லத்தின் விலை வேகமாக உயருவதைத் தடுக்க வேண்டுமென்ற அவசரத் தேவையும், பயன்படுத்துபவர்களுக்குக் கிடைக்கும் சர்க்கரையில் ஏற்படும் பற்றுக் குறையைச் சமாளிப்பதுமான அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கான முக்கியக் காரணங்களாகும்.

"வாழ்க்கைச் செலவு குறிபீட்டு எண் கணிசமாக உயரமாலிருப்பதற்கு வெல்லத்தின் விலையை நிலைப்படுத்துவது, தவிர்க்க இயலாததாகும்."

வருந்துகிறோம்

எண்ணூர் வட்ட தி. மு. க. செயலாளர் இ. வி. சேது அவர்களின் தந்தையார் 21—10—67 வியாழக்காலை 3-மணியளவில் இயற்கையெய்திய செய்தியை அழுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். 22—10—67 காலை 10 மணியளவில் சவ அடக்க ஊர்வலம் நடைபெறும்.

'அலுவல்கள் பல இருப்பினும் அழைப்பை மறுக்க மனமில்லை'

'உங்களைச் சந்திக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்'

அறிஞர் அண்ணாவுக்கு ஜாகிர் உசேன் கடிதம்

சென்னை, அக். 20—

"உலகத் தமிழ் மாநாடு சென்னை நகரில் வருகிற ஆண்டுத் துவக்கத்தில் நடக்கவிருப்பதை அறிந்து மகிழ்கிறேன். உங்கள் வழிகாட்டுதலின்கீழ் இந்த மாநாடு சிறப்பாக நடக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். மாநாட்டைத் துவக்கிவைக்க என்னை அழைத்தமையைப் பாராட்டுகிறேன்.

"அந்தச் சமயத்தில் பல அலுவல்கள் எனக்கு இருக்கும் என்றபோதிலும்—எனக்குத் தமிழ் தெரியாது என்ற போதிலும்—உங்கள் அழைப்புக்கு 'இல்லை; வர இயலாது' என்று சொல்ல எனக்கு மனம் இல்லை; நான் வருகிறேன்; உங்களைச் சந்திக்கும் [illegible] ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்."



இவ்வாறு, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அறிஞர் அண்ணா அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் நடக்கவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கி வைக்க வேண்டும் என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் எழுதியிருந்த கடிதத்திற்கு அவர் இவ்வாறு பதில் அனுப்பியுள்ளார்.

ஜாகிர் உசேன் குடியரசுத் தலைவரான பிறகு தமிழகத்துக்கு வருவது இதுதான் முதல்தடவையாகும்.

'சுத்தம்'—'சுயம்' போன்ற வார்த்தைகள், கடை துவக்கப்பட்டது முதல் பலகைகளில் சில மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பு வர்ணங்களில் காணப்படக் கலப்படக் குற்றத்துக்காக வாரத்துக்கு ஒரு முறையாவது அபராதம் கட்டிய வியாபாரிகள், சிறைசென்ற விறபனையாளர்கள் ஆகியோரைச் சந்தித்திருக்கிறீர்களா?

அரசியலில் அவர்களது மறுபதிப்பாக நமது காங்கிரசுக்காரர்களைச் சொல்லலாம்!

'அம்மாஎன்ன பண்ருங்க?' என்று கேட்க-'டிரஸ் செய்துக்கிருங்க' என்று பதில் வர—'அப்படியானால் இது வரையில்...?' என்று திருப்பிக் கேட்டதாகச் சிரிப்பு உலலில் அடிக்கடி கூறப்படும் இந்த விசமான வேடிக்கையைத்தான் காங்கிரசுக்காரர்களின் 'சோஷலிசம்' நினைவுபடுத்துகிறது!

இப்போது ஜல்பூரில் கூடப்போகும் அவர்கள், இத்தடவைதான் 'உண்மையான சோஷலிசம்' பற்றிப் பேசி, காங்கிரசை 'சுத்தப்படு'த்தப் போகிறார்களாம்;

'அப்படியானால், இதுவரையில்...?' என்று எவரும் கேட்க வேண்டாம்! நமக்கு ஏன் அந்த வேதனை!

ஏதோ பத்து அமசத் திட்டமாம் படாதபாடு படுகிறது, பாவம்! பன்னிரண்டு காங்கிரசு எம்.பி.-க்கள், 'அழையாத விருந்தாளி'களாய் பல மாநிலங் காங்கிரசுத் தலைமைப்பீடங்களுக்கும் போய்த் திரும்பியிருக்கிறார்கள்!

'தொழில், அபிவிருத்தித் துறைகளில் சோஷலிசத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்' என்பதுதான் அந்தப் பத்து அம்சத் திட்டம்! வழக்கமாகப் பேசியே காலத்தைப் போக்கும் 'பாங்கினைத் தேசிய உடைமையாக்குவது—மன்னர்கள் மானியம்—பொதுத் துறை விரிவு' போன்றவைகளெல்லாம், அந்தப் பத்து அம்சத் திட்டத்தின் முக்கிய உள்ளடக்கங்கள்!

ஆனால் அதற்குள் பாட்டில், அதற்குக் கச்சை கட்டி எதிர்ப்புத் திரட்டிவருகிறார்— 'இப்போது என்ன அவசரம்?' என்கிறார்!

இந்துப் பிள்ளையிலிருந்தான் கட்சியைச் 'சுத்தம்' செய்வதற்கும், சோஷலிசத்தைச் செயல்முறையாக்குவதற்கும் ஷாந்தி கோத்தாரி என்னும் எம்.பி.—இளம் வயதினர்—புரட்சித் தீர்மானம் ஒன்றையும் ஜல்பூர்மாநாட்டுக்குத் கொடுத்துள்ளார்!

சோஷலிசக் கலப்படத்துக்காக-கொள்கை மோசடிக்காக-காங்கிரசு, 1967-ல் 'தண்டிக்கப்பட்டு' விட்டது! 'அபராத'மும் விதிக்கப்பட்டிருக்கிறது!

ஆண்டுதோறும் — சமயம் வரும்போது அவ்வப்போதும் செய்யும் ஒரு வாடிக்கையாக இப்போது ஜபல்பூரில் 'உண்மை சோஷலிச'த்துக்கு ஒரு புதுப்பூச்சு தரப்போகிறார்களாம்! காங்சுக் கட்சியைச் சுத்தம் செய்யப்போகிறார்களாம்!

தைக்க முடியாத கிழிசல்களை ஒட்டுப் போட்டு மறைக்க முடியாது!

போக்க முடியாத அழுக்குகளைச் சுத்தப்படுத்தி வெண்மை காண முடியாது!

—எஸ். ஆர்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஊர்வலத்தின் முன்னால் யானை ஒன்று வந்தது—அந்த யானையைச் சுற்றி வேடிக்கை பார்க்கும் சிறுவர் கூட்டம்! அடுத்து ஒரக ஆட்டம்—அதைச் சுற்றி வேடிக்கை பார்க்கும் கூட்டம்! பின்னாலே ஒரு குதிரைமீது ஒருவர் அமர்ந்து வந்தார்; அவருக்குப் பின்னாலே கதர்க் குல்லாய் அணிந்த மாபெரும் அணிவகுப்பு! (பெரும்பாலும் சிறுவர்கள்)! அதில் வந்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா ?—எண்ணிப்பாத்தால் மொத்தம் இரு நூறு பேர்கூடத் தேறமாட்டார்கள்!

எல்லாருக்கும் பின்னாலே வேட்பாளர், ஒரு வண்டியில் ஏறி நின்று கும்பிட்டபடி வந்துகொண்டிருந்தார்! 'இவர்தான் வேட்பாளர்' என்று காட்டுவதற்காக ஒருவர், பெட்ரோமாக்ஸ் விளக்கை ஏந்தியவாறு அருகில் நின்றுகொண்டிருந்தார்!

இவ்வளவுதான் ஊர்வலம்! இதற்குத்தான் ஏக ஆர்ப்பாட்டம்—விளம்பரம்—எல்லாம்!

'இப்போது ஆளுங்கட்சியாக தி. மு. க. மாறிய பிறகு, எதிர்க் கட்சியான காங்கிரசுக் பக்கமே மக்கள் சாய்ந்துவிட்டனர்; தென் சென்னை காங்கிரசுக்குத்தான்' என்றெல்லாம் வெற்று வேட்டுப் [illegible] சிகிரசாரின் குட்டு, நேற்றைய ஊர்வலத்தின் [illegible] விட்டது!

[illegible] லத்தை நடத்தாமலே இருந்திருந்தாலும், கௌரவ [illegible] கும்; பிரமாதமாக விளம்பரம் செய்து இந்தப் [illegible] ஊர்வலத்தை நடத்திக் கெடுத்துவிட்டார்களே'' என [illegible] ங்கிரசுக்காரர்களே பேசிக்கொள்கிறார்கள்!

[illegible] நிகழ்ச்சிகள்

மாரன் [illegible] அள்ளி பொன்முடி அரங்கில் 23—10—67 பிற்பகல் 2 மணி [illegible] எம். என். அங்கமுத்து தலைமை[illegible]—நடிகர் ஆனந்தன், மா. செ[illegible]ட்டுவன், மாதவ மணி தீபன் [illegible]யோர் முன்னிலையில், சென்னை [illegible] மணிவண்ணன—பதிமினி குழுவினரின் 'புலுவுக்கு பின்?' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

சென்னை 81-வது வட்டத்தில்

22—10—67 மாலை 7 மணிக்கு சென்னை 81-வது வட்டம்—வன்னியர் தெரு[illegible]டையே போயில் சாலையில், தென் சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் முரசொலி மாறன் ஆதரித்து, எம். மணி தலைமையில் — அ. டேனியல், இலக்குவன், சுப்புக்கண்ணு, அகமுதன், இராமன் ஆகியோர் முன்னிலையில் சிவகங்கை சேதுராசன் கலை நிகழ்ச்சி நடைபெறும்.